48—

மருந்து அட்டைகளில் பெயர்

***49570—திரு. மு. கார்த்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மருந்துக் கடைகளில் மருந்துகளின் அட்டைகளில் பெயர்களை ஆங்கிலம் மற்றும் தமிழ்ச் சொற்களுடன் அச்சடித்து விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 49, திரு. க. பாரமலை, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.*

49—

விடுதிகளுக்குப் புதிய கட்டடம்

***32044—திரு. க. பாரமலை:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையிலும், பழையனூரிலும் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கான விடுதிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கும்?